## மெட்ரோ ரெயிலில்

# ஒரே நாளில் 1.40 லட்சம் பயணிகள் பயணம்!

சென்னை, பிப். 15-
மெட்ரோ ரெயிலில் நேற்று ஒரே நாளில் 1.40 லட்சம்பயணிகள்பயணம் செய்தனர். இது சாதனையாக பார்க்கப்படுகிறது.

சென்னை வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே மெட்ரோ ரெயில் போக்குவரத்தை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார். இதை தொடர்ந்து நேற்று பகல் 2 மணி முதல் இரவு 11 மணி வரை பயணிகள் கட்டணமில்லாமல் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் மெட்ரோ ரெயில்களில் கூட்டம் அதிகமாக இருந்தது. சுற்றுலா வந்து செல்வதை போல கூட்டம் கூட்டமாக மெட்ரோ ரெயில்களில் பயணம்செய்தனர். நேற்று ஒரே நாளில் மட்டும் அதிகபட்சமாக 1.40 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.